O.S.NO:31/2017 24-08-2018

PW1 CROSS Nadarajan

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை:-

நான் தமிழில் மட்டும் ஓரளவு எழுத படிக்க தெரியும். நாங்கள் மாமூலாக சென்று கொண்டிருக்கும் வழியில் பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என்று இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லும் மாமூல் வழிபாதையானது வனத்துறைக்கு சொந்தமானது. 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது சித்தி மற்றும் எனது சித்தப்பா மகன்கள் ஆவார்கள். எனக்கும் எனது சித்தப்பா குடும்பத்தாருக்குமிடையே கடந்த 30 ஆண்டு காலமாக வழக்கு விவகாரங்கள் நடந்து வருகிறது என்றால் சரிதான். 30 ஆண்டு காலமாக எனக்கும் அவர்களுக்கும் இடையே சுமுகமாக உறவு கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்தை குறிப்பிட்டு காட்டும் வகையில் தாவா பிராதுடன் ஒருமாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் தாவா சொத்தான பாதையானது குடியாத்தம் - சித்தூர் செல்லும் மெயின் ரோடிலிருந்து கிழக்கு நோக்கி சென்று பிறகு தெற்கு நோக்கி தொடர்ந்து செல்கிறது. அந்த வழிபாதைக்கு கிழக்கு புறத்தில் பெருமாள் என்பவரின் சொந்தமான வீடு உள்ளது. அந்த சொத்தின் சர்வே எண் 253/4எ. பெருமாள் சொத்திற்கு தெற்கு புறத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சர்வே எண் 253/4எப் என்ற 14 செண்டும், சர்வே எண் 253/4எப் என்ற 9 செண்ட் சொத்தும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களுக்கு தெற்கு பக்கத்தில் உள்ள சர்வே எண் 253/4ஜி என்ற சொத்து தான் எனக்கு சொந்தமான சொத்து என்றும் அதை தான் இந்த தாவாவில் எ அட்டவணை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த தாவா எ அட்டவணை சொத்தில் ஒரு வீடும், அந்த சொத்திற்கு தெற்கு புறத்தில் உள்ள ஓடை புறம்போக்கு நிலத்தில் ஒரு வீடும் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தான வழி பாதைக்கு மேற்கு புறத்தில் கல்லப்பாடி மோட்டூர் கிராம தொடக்கப்பள்ளி உள்ளது என்றால் சரிதான். அந்த பள்ளி உள்ள இடமானது சர்வே எண் 253/3ல் உள்ளது. அந்த பள்ளி அமைந்துள்ள சொத்தான சர்வே எண் 253/3-ன் ஒரு பகுதி சொத்து தான் நான் தாவாவில் பி அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள வழி பாதையானது உள்ளது என்றால் சரிதான். அந்த பள்ளியின் சுற்று சுவரானது 2004 ஆண்டு கட்டப்பட்டது. அந்த சுற்று சுவர் காம்பவுண்ட் கட்டுவதற்கு முன்பாக நாங்கள் பள்ளிக்கு சொந்தமான இடத்தின் வழியாக சென்று வந்திருந்தோம் என்றால் சரிதான். அந்த வழியை தான் சொத்தின் ஓரமாக ஒதுக்கி விட்டு சுற்று சுவர் கட்டிக்கொண்டார். அந்த பள்ளிக்கு தெற்கு பக்கத்தில் கிழக்கு மேற்காக செல்ல வேண்டி ஒரு வழி உள்ளது என்றால் இல்லை. என்னுடைய நிலத்திற்கு தெற்கு புறத்தில் ரத்தினம், மோகன், கோவிந்தம்மாள் ஆகியோருடைய நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்கள்

அந்த பள்ளிக்கு தெற்கு பக்கத்தில் கழக்கு மேற்காக உள்ள வழியைதான் பயன்படுத்திவருகிறார்கள் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2,3 ஆவணமானது அ.வ.எண்.754/2004 வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அந்த வழக்கானது இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி பவுனம்மாள் கல்லப்பாடி பஞ்சாயத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கில் பவுனம்மாளுக்கு ஆதரவாகதான் தீர்ப்பானது என்றால் சரிதான். இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்புப மற்றும் தீர்ப்பாணையின் பேரில் தான் நானும் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே அந்த வழி பாதையில் சென்று வந்தேன் என்பதால் தான் அந்த வழி பாதையில் உரிமை கோரி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கை பவுனம்மாள் என்ன பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்களும் இந்த பொது வழி பாதையில் சென்று வருவதை தடை செய்யக்கூடாது என்று தாவா தாக்கல் செய்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் இந்த தாவாவில் சொல்லப்பட்டுள்ள தாவா பி அட்டவணை சொத்தானது பொது வழி பாதையே கிடையாது என்றும் அந்த வழி பாதையானது கல்லப்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு சம்பந்தப்பட்ட சர்வே எண் 253/3 சொத்தில் சுற்று சுவர் காம்பவுணட் அமைக்க வேண்டி கடக்கால் போட ஜேசிபி மூலம் தோண்டிய போது பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்துக்கு மெயின் ரோட்டிலிருந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டதின் காரணமாகதான் 1ம் பிரதிவாதி கல்லப்பாடி பஞ்சாயத்திற்கு எதிராக அ.வ.எண் 754/2004 வழக்கை தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றார் என்றால் சரியல்ல நாங்கள் எல்லோரும் சேர்ந்து தான் அந்த காம்பவுண்ட் அமைத்ததை எதிர்த்து காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தோம். அவ்வாறு காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனுவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வழி பாதையில் நான் தனிப்பட்ட முறையில் கல்லப்பாடி பஞ்சாயத்திற்கு எதிராக தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை தடைசெய்த பிறகு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். அந்த வழி பாதையானது 12 அடி அகலம் உள்ளது. சுமார் 100 மீட்டர் நீளம் இருக்கும். மேற்படி பாதையின் அகலம் நீளம் குறித்த அளவுகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பள்ளி சார்பாக சுற்று சுவர் காம்பவுணட் கட்டும் போது வழி பாதையானது 1ம் பிரதிவாதி தீர்ப்பு பெறப்பட்டதின் பேரில் தான் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த தீரப்பிற்கு முன்னதாகவே ஒதுக்கிகொடுத்துவிட்டார்கள். 1ம் பிரதிவாதி அ.வ.எண்.754/2004 வழக்கில் சாதகமாக தீர்ப்பு பெற்றதின் பேரில் தாவா பி அட்டவணை சொத்தான பாதையானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு

அனுபவித்து வந்து அந்த சொத்தை தற்பொழுது 3ம் பிரதிவாதி சோமசுந்தரம் என்பவருக்கு 09.01.2015 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் 2017 ஜனவரி முதல் வாரத்தில் என்னை அந்த வழி பாதையில் செல்ல விடாமல் தடைசெய்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். அந்த புகாரின் பேரில் இருதரப்பிலும் அழைத்து காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். தாவா பி அட்டவணை சொத்தானது பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றும் எனக்கு சொந்தமான சொத்தான தாவா எ ,அட்டவணை சொத்திற்கு செல்ல வேண்டி அந்த பள்ளிக்கு தெற்கு புறத்தில் கிழக்கு மேற்காக செல்லும் வழி ஒன்று தனியாக உள்ளது என்றும் அதனால் தாவா பி அட்டவணை சொத்தில் எனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள வழி பாதையில் எனக்கு சொந்தமான சொத்தான தாவா எ அட்டவணை சொத்திற்கு முன் பகுதியில் பள்ளி சுற்று சுவரை ஒட்டினார் போல் ஒரு பாத்ரூம் கட்டியுள்ளேம் என்றால் சரிதான். அது எனது தகப்பனார் காலத்தில் கட்டப்பட்டது. அந்த பாத்ரூமை ஒட்டி வடக்கு புறத்தில் ஒரு வேப்ப மரம், நாக மரம் உள்ளது அங்கு கல்லு சாமி எதுவும் கிடையாது. அந்த மரத்தில் மாடுகளை கட்டி வருவேன் என்றால் சரியல்ல வெயில் காலத்தில் மட்டும் அவ்வப்போது கட்டுவேன். நான் மேற்படி வீதம் மாடுகளை கட்டி தடைசெய்து வருவதும்,பாத்ரும் கட்டியுள்ள விவரமும் மறறும் கல்லு சாமி வைத்து பூஜை செய்து வரும் விவரமும் நீதிமன்ற ஆணையரை நியமித்து பார்வையிட்டால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான் அப்போது தான் பள்ளிக்கு தெற்கு பக்கத்தில் எந்த வழிவித வழியும் இல்லை என்ற விவரம் தெரியவரும். தாவா பி அட்டவணை சொத்திற்கும் எனக்கும் எவ்விதமான பாத்தியமும், உரிமையும் கிடையாது என்றும் அதனால் இந்த தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.